**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS
**CC.No. 334/2024**
PW-4

| | | | |
|---|---|---|---|
| Name | பழனிச்சாமி(PW4) | Calling | உதவி ஆய்வாளர் |
| Father's Name | தேவனன் | | |
| Village | திருமுருகன்பூண்டி காவல் நிலையம் | | |
| Taluk | அவிநாசி | Age | **58** |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of August 2026** by K.Kulanthiavel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது திருமுருகன்பூண்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்த வழக்கில் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியும் அளிக்கிறேன். கடந்த 22/9/2024 ஆம் தேதி திருமுருகன் பூண்டி காவல் நிலையம் தலைமை காவலர் சுரேஷ்குமார் என்பவர் நிலையை அலுவலகத்தில் இருந்தபோது வெண்ணிலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரை பெற்று நிறைய குற்ற எண் 622/2024 சட்டப்பிரிவுகள்296(b), 115(2), 118(1) BNS இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கினை புலன்விசாரணைக்காக சிறப்பு உதவி ஆய்வாளர் மகாதேவன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். **புகார் அ.சா.ஆ.2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

சிறப்பு உதவி ஆய்வாளர் மகாதேவன் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 23/9/2024 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆனந்தன் சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ இடத்திலிருந்து மர குச்சி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் 09.30 மணிக்கு ஒரு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 27.9.2024 ஆம்

தேதி நிலையம் ஆஜரான எதிரிகளை கைது செய்து பிணையில் விடுவித்துள்ளார். 10.10.2024 ஆம் தேதி வழக்கில் காயம் பட்ட ராஜேந்திரன் மற்றும் சதீஸ்குமார் ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ராஜவாணி என்பவரை விசாரித்து காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **காயச்சான்றுகள் அ.சா.ஆ.7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே இந்த வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்

**குறுக்கு விசாரணை :**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதா என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை.**

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |